பொன் வித்யாஷ்ரம் பள்ளி

வகுப்பு: ஒன்பது

பெயர் ---------------------- தமிழ்

வகுப்பு: ஒன்பது அரையாண்டு பாடப்பகுதி

பயிற்சி தாள் -1

அ.பத்தியை படித்து தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி:-

தமிழ் நாட்டின் நாயக்கர் மரபில் பெண்கள் முடிசூடி ஆட்சி செய்ததாக வரலாறு இல்லை ஆனால் காப்பாட்சியாளராக ஆட்சி புரிந்து உள்ளனர் . அதற்குச் சிறந்த சான்றாகத் திகழ்ந்தவர்கள்தான் இராணி மங்கம்மாள் .அரசுரிமைக்கு உரியவர்கள் குழந்தைகளாக இருந்ததனால் அவர்களுக்குப் பதிலாக இவர் காப்பாட்சியாளராக இருந்து ஆண்டார்.மதுரையை ஆண்டு வந்த சொக்கநாத நாயக்கரின் மனைவி இராணி மங்கம்மாள். அக்காலத்தில் கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறுவது வழக்கமாக இருந்தது. இராணி மங்கம்மாளின் கணவன் இறந்த போது

தன் மகன் இரங்க கிருட்டினமுத்து வீரப்பன் இளம் வயதினனாக இருந்தான். அவனுக்குத்துணையாக இருக்க வேண்டும் என்னும் கடமையுணர்வினால் இராணி மங்கம்மாள் உடன்கட்டை ஏறவில்லை.மங்கம்மாள் தன் மகன் அரங்க கிருட்டின முத்து வீரப்பனுக்குத் திருமணம் செய்வித்த பின்னர் முடிசூட்டினார்.அரசாட்சியை அடக்கத்தோடு தந்திரத்தோடு நாம் நோக்க வேண்டும். முன் கோபமும் அதன் விளைவும் அரசியலில் ஒருபோதும் வெற்றியைத் தராது

பகைவரை எதிர்கொள்ள எப்போது ஆயத்த நிலையில் இருப்பதோடு மிகுந்த பொறுமையுடனும் செயல்பட வேண்டும் என்றெல்லாம் மகனுக்கு அறிவுரை கூறினார்.முத்து வீரப்பன் அன்னை காட்டிய வழியில் திறமையாக ஆட்சி புரிந்தான். தந்தை சொக்கநாதர் இழந்த பகுதிகளைப் போரிட்டு மீட்டான்.மக்களிடம் நற்பெயர் பெற்றான்.

1.காப்பாட்சியாளராக இருந்த பெண் ----------------------

அ.முத்து வீரப்பன் ஆ.இரங்க கிருட்டின இ.இராணி மங்கம்மாள்

2. .இராணி மங்கம்மாள் மகனின் பெயர் ------------------

அ.சொக்கநாதர் ஆ.இரங்க கிருட்டின இ. முத்து வீரப்பன்

3. . .இராணி மங்கம்மாள் கணவனின் பெயர் -------------------

அ.சொக்கநாதர் ஆ.இரங்க கிருட்டின இ. முத்து வீரப்பன்

4. இழந்த பகுதிகளைப் போரிட்டு மீட்டவன் ---------------------------

அ.முத்து வீரப்பன் ஆ.இரங்க கிருட்டின இ.இராணி மங்கம்மாள்

5. ------------------------ அரசியலில் ஒருபோதும் வெற்றியைத் தராது

அ.முன் கோபமும் விளைவும் ஆ.அவசரம் இ. அமைதி

ஆ.கட்டுரை-

1.முன்னுரை – ஒழுக்கத்தின் மேன்மை –ஒழுக்கத்தின் பண்புகள் - வாய்மையின் சிறப்பு-அரிச்சந்திரனின் கதை –முடிவுரை.

(அல்லது)

2.முன்னுரை –உடற்கல்வி –அவற்றின் பயன்கள் -உயர்வுக்கு உறுதுணையாக வாய்ப்புகள் காத்திருக்கின்றன –பாரதியின் அறிவுரை- முடிவுரை.

இ.கடிதம்

1. உன் ஊருக்கு பேருந்து வசதி வேண்டி போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்கு கடிதம் எழுதுக.

(அல்லது)

2.உன் பள்ளியில் நடைபெற்ற விளையாட்டு விழாக் குறித்து உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

# I.இலக்கணப் பகுதி

(1.யாப்பு 2.இல்பொருள் உவமை அணி 3.வேற்று பொருள் வைப்பு அணி

4.வழாநிலை வழு வழுவமைதி 5.பெயர்ச்சொல் (தொழில் பண்பு)

6.சொல்லாகு பெயர்7.தானியாகு பெயா ்8.விற்பூட்டு பொருள்கோள்

9.தாப்பிசை பொருள்கோள்)

1.நிரப்புக

1.வினைமுற்று ஒரு வினையைக் குறிக்காமல் வினையாற்றியவரைக் குறிப்பது.

-------------------

அ.தெரிநிலை வினைமுற்று ஆ. வினையாலனையும் பெயர்

இ.தொழிற் பெயர் ஈ. கருத்தவாகு பெயர்

2.நிறப் பண்புப்பெயர் ----------------------

அ.கூம்பு வடிவம் ஆ.கருங்குரங்கு இ.பத்து மீட்டர் ஈ.பலாப்பழம்

3.கொடு

அ.முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் ஆ.தொழிற்பெயர்

இ.வினைச்சொல் ஈ..முதனிலை தொழிற்பெயர்

4.நிறம் சுவை அளவு வடிவம் ஆகியவற்றின் அடிப்படையாக தோன்றுபவை--------------

அ.வினையாலணையும் பெயர்கள் ஆ.பண்புப்பெயர்கள்

இ.தொழிற்பெயர் ஈ..முதனிலை தொழிற்பெயர்கள்

5.வெண்பாவில் உயர்வு என்னும் ஈற்றுச்சீரில் வரும் ஓரசைச்சீர் வாய்ப்பாடு--------------

அ.நாள் ஆ.மலர் இ.காசு ஈ.பிறப்பு

6.மாமா வந்தது (திணை வழா நிலையாக்குக)

அ.மாமா வரவில்லை ஆ.மாமா வந்தார் இ.மாமா வருவாள் ஈ.மாமா வரமாலிருப்பாள்

7.கெடுவான் கேடு நினைப்பான் (முதனிலை திரிந்த தொழிற்பெயரை எடுத்து எழுதுக)

அ.கெடு ஆ.நினை இ.கேடு ஈ.பான்

8.பால் வழு ---------------------

அ.கவிதா பாடினான் ஆ.கவிதா வந்தாள் இ.மலர் பூத்தது ஈ.அலை வீசியது

9.இடம் பொருளுக்கு ஆகி வருவது ------------------

அ.கருவியாகு பெயர் ஆ.தானியாகு பெயர் இ.இடவாகு பெயர் ஈ.பொருளாகு பெயர்

10.இலக்கண முறையின்றி பேசுவது எழுதுவது ------------------

அ.வழு ஆ.வழா நிலை இ.வழுவமைதி ஈ.பொருள்கோள்

2.சான்று தருக:-

1.சொல்லாகு பெயர் -

2.தானியாகு பெயர்

3.விற்பூட்டு பொருள்கோள் -

4.தாப்பிசை பொருள்கோள் -

5.இல்பொருள் உவமையணி –

6.திணை வழுவமைதி –

7.வேற்றுப்பொருள் வைப்பணி –

8.குறில் தனித்து –

9.குறில் ஒற்று –

10.நெடில் தனித்து –

11.நெடில் ஒற்று –

3.செய்யுள் திறனறி வினாக்களுக்கு விடையளி

தீயின் வாயினீர் பெறினு முண்பதோர்

சிந்தை கூரவாய் வெந்து லர்ந்துசெந்

நாயின் வாயினீர் தன்னை நீரெனா

நவ்வி நாவினா னக்கி விக்குமே

1.இப்பாடல் எத்தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

2.இப்பாடலின் ஆசிரியர் பெயர் என்ன?

3.நவ்வி -பொருள் தருக.

4.தீயின் வாய் -பொருள் தருக.









## <u>II</u>செய்யுட்பகுதி:-

(1.திருக்குறள்2.திருவிளையாடற் புராணம் 3.ஓய்வும் பயனும்

4.இன்பம்5.முத்தொள்ளாயிரம்6.கலிங்கத்துப்பரணி)

வினாக்கள்

1.கேள்வியின் சிறப்பு குறித்து எழுதுக.

2.கேள்வி செல்வத்தினால் ஏற்படும் நன்மைகள் யாவை?

3.கேள்விச்செல்வம் பெறாததனால் ஏற்படும் குற்றங்கள் யாவை?

4.திருவிளையாடற் புராணம் -குறிப்பு எழுதுக.

5.தருமி பொற்கிழி பெறச் சென்ற போது நிகழ்ந்தது யாது?

6.இறைவனுக்கு நக்கீரனுக்கும் இடையே நடந்த உரையாடலை விவரி

7.ஓய்வு நேரத்தைப் பயனள்ளதாக்கும் வழிகளாகப் பெருஞ்சித்தனார் கூறுவன யாவை?

8.வாழ்வில் வெற்றி பெறுவதற்கான வழிகள் யாவை?

9.பெருஞ்சித்தரனார் குறிப்பு தருக.

10.சுரதா ஆசிரியர் குறிப்பு தருக

11.இன்பம் தருவனவாக உவமைக் கவிஞர் கூறுவன யாவை?

12.வானவர்கள் வாழ்வது எவ்விதம்?

13.சோழனின் நற்பண்பை விளக்குக

14.யானை பகைவர் மார்பில் எழுதியது என்ன?

15.முத்தொள்ளாயிரம் - நூற் குறிப்பு தருக

16.கலிங்கத்துபரணி - நூற் குறிப்பு தருக

17.மானின் வாய் உலர காரணம் என்ன?

18.பாலை நிலத்தின் வெம்மையைக் கலிங்கத்துபரணி எவ்வாறு விளக்குகிறது?

19.சயங்கொண்டார் -குறிப்பு தருக.

## III.உரைநடைப்பகுதி:








(1.கடற்பயணம் 2.பெருந்தலைவர் காமராசர் 3.உலகளாவிய தமிழர்)

1.கலத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை?

2.தமிழகத்தில் நடைப்பெற்ற ஏற்றுமதி இறக்குமதி பொருள்கள் பற்றி எழுதுக.

3.கப்பலின் தோற்றத்தை புறநானூறு எவ்வாறு உவமிக்கிறது?

4.அக்காலத்தில் பூம்புகார் எவ்வாறு விளங்கியது?

5.காமராசர் தலைவர்களை உருவாக்குபவர் என அழைக்கப்படக் காரணம் என்ன?

6.காமராசர் திட்டம் என்றால் என்ன?

7.காமராசர் நிலசீர்திருத்தம் பற்றி  எழுதுக.

8.காமராசரின் நினைவாக தமிழக அரசு செய்த சிறப்புகள் யாவை?

9.காமராசரின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட தொழில் முன்னேற்றம் பற்றி எழுதுக.

10.கல்விகண் திறந்த முதல்வர் -என போற்றக் காரணம் என்ன?

11.இன்றைய  நிலையில்  தமிழர் புலம்பெயர்வதற்கான காரணங்கள் யாவை?

12.புலம் பெயர்ந்த தமிழர்கள் தாயகத்துடன் கொண்டுள்ள தொடர்பு எத்தகையது?

13.ரியூனியன் தீவில் வாழும் தமிழர் பற்றி எழுதுக.








# IV.துணைப்பாடப் பகுதி(கட்டுரை)

1.கெலன் கெல்லர்

2.மு.வரதராசனார் தன் தம்பிக்கு  எழுதிய கடிதம்

3.திரு.வி.கவின்தமிழ்பணி

## V.சுருக்கி எழுதுக:-

“பட்டங்கள்  ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள்

நடத்த வந்தோம்” என்கிறான் பாரதி. புதுமைபெண்கள் பற்றிய  அவன்

பார்வை சற்று விசாலமானது. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?என்றிருந்த காலம் போய்ஆணுக்கு பெண்ணிங்கே இளைப்பில்லைக் காண் என்று முரசு கொட்டும் முத்தான காலத்தின் முகப்பு வாசலேமேற்கண்ட பாரதியின் பாடல் வரிகள்“ஒரு மீனைக் கொடுங்கள் என் ஒரு நாள் பசியாறும். ஒரு மீனைப்பிடிக்கக் கற்றுக்கொடுங்கள்.என் வாழ்நாள் முழுதும் பசியாறும்” என்பது பொன்மொழி.. ஒருஆண் கல்வி கற்றால் அது தனி மனிதனின் வாழ்க்கைதரத்தை உயர்த்தும் உண்மை தான். ஆனால் ஒரு பெண் கல்வி கற்றால் குடும்பத்தின் வாழ்க்கைத் தரமேஉயரும். உணர்ந்து பாருங்கள் உண்மை விளங்கும்.தாய் கற்ற கல்வி தாயோடு நின்று விடுவதில்லை.அவள் பெற்ற கல்வியை பிள்ளைகளுக்கும் அளிக்கிறாள் . தந்தை வழிக்கல்விக்கு வாய்ப்பு உண்டு.ஆனால்தாய்வழிக்கல்விக்கு மகத்துவம் உண்டு.இதனை யாரும் மறுக்க இயலாது.இல்லதரசிகள் வாழ்க்கைக் கப்பலின் நங்கூரங்கள் அவர்கள் கற்ற கல்வியோ கலங்கரை விளக்கங்கள் .வீட்டுக்கு மட்டுமல்ல நாட்டுக்கு வழிகாட்டும். கல்விகற்று வேலை பார்க்கும் மகளிருள் 99% லஞ்ச லாவண்யமற்றவர்களாகஇருக்கின்றனர் என்பது செய்தி. மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக்

**கொளுத்துவோம். மங்கையரை கற்க சொல்லி மாநிலத்தை உயர்த்துவோம்.**